# வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் தவணைப் பரீட்சை, மார்ச் – 2020

**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

FWC


| தரம் :– 13 (2020) | சித்திரக்கலை | புள்ளித்திட்டம் |
|---|---|---|

*சித்திரக்கலை* **I** *– 100 புள்ளிகள்*
**II** *– 100 புள்ளிகள்*
**III** *– 100 புள்ளிகள்*

*(300 புள்ளிகள்)*

*இறுதிப்புள்ளி 300 ÷ 3 = 100 புள்ளிகள்*

*சித்திரக்கலை* **I** *– பகுதி* **I** – $40 \times 1 = 40$ புள்ளிகள்
**II** – $15 \times 4 = 60$ புள்ளிகள்
$100$ புள்ளிக

| வினா இல. | விடை இல. | வினா இல. | விடை இல. | வினா இல. | விடை இல. | வினா இல. | விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | **4** | 11 | **3** | 21 | **3** | 31 | **3** |
| 2 | **2** | 12 | **2** | 22 | **5** | 32 | **4** |
| 3 | **3** | 13 | **1** | 23 | **5** | 33 | **5** |
| 4 | **4** | 14 | **2** | 24 | **4** | 34 | **2** |
| 5 | **3** | 15 | **4** | 25 | **2** | 35 | **3** |
| 6 | **1** | 16 | **4** | 26 | **3** | 36 | **2** |
| 7 | **5** | 17 | **3** | 27 | **2** | 37 | **4** |
| 8 | **2** | 18 | **3** | 28 | **1** | 38 | **1** |
| 9 | **2** | 19 | **3** | 29 | **3** | 39 | **3** |
| 10 | **3** | 20 | **3** | 30 | **4** | 40 | **3** |

***வினா இல 01***

**i)**

- வாகல் கடம்
- வட்டதாகே (வாசல், சுற்றுபிரகாரம், தோரணம்) *(2 புள்ளிகள்)*

**ii)**

- இந்திய கலைஞர்களின் ஆதரவு.
- இந்திய சாஞ்சி தூபியை பின்பற்றப்பட்டமை.
- இலங்கையில் முதல் தாது கோபம் தூபராம தூபி ஆகும்.
- அளவில் சிறியது – வட்டதாகே அமைப்பு காணப்பட்டது.
- உதாரணம் தூபராமய, லங்காராமய, திரியாய, மெதிரிகிரிய, மிகிந்தலை.
- பின்வரும் வடிவங்களில் தூபிகளின் நிலை – தானியக் குவியல், மணிவடிவம், நீர்க்குமிழ் வடிவம், பானை வடிவம்.
- தூபிகளை மெருகூட்டுவதற்கும், பெரிப்பிப்பதன் பொருட்டு வெவ்வேறு விதமான பகுதிகள் சேர்க்கப்பட்டன. சதுரக்கோட்டம், (ஹதரஸ்கொட்டுவ) சத்திராவலி, சூடாமாணிக்கம், தேவாதக்கோட்டம், கொத்கரல்ல, (சித்திராவலி) போன்றன.
- தூபியில் வெவ்வேறு அங்க இலட்சனங்களைக் கொண்ட சிற்பங்கள் செதுக்கல்கள் காணப்படல். *(5 புள்ளிகள்)*

**iii)**

- காவற்கல்
  சந்திரவட்டக்கல்
  (கொரவக்கல்) கைப்பிடி
  படிவரிசை சிற்பம்
  வாகல்கடம்
  தூண்
  (மேற்குறிப்பிடப்பட்ட செதுக்கல்களை கலைத்துவத்துடன் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்)
  *(8 புள்ளிகள்)*

### *வினா இல 02*

i) • கடலதெனிய விகாரை, யாப்பகூவா வாயில் *(2 புள்ளிகள்)*

**ii)**

- இது அரசாரக்ளுக்காகவும் பிரபுக்களுக்காகவும் தெய்வங்களுக்காகவும் அமைக்கப்பட்ட கட்டடம் அல்லாத போதும் பாமர மக்களுக்காகக் கட்டப்பட்ட பொது கட்டடமொன்றாகும்.
- நான்கு கற் சலாகைகள் மீது நில மட்டத்தில் இருந்து ஒரு அடி உயரத்தில் இது கட்டப்பட்டுள்ளது.
- தங்குமிடத்தின் மரத் தூண் ஒன்று ஆறு அடி உயரமுடையது. அத்தூண்கள் எம்பக்க ஆலயத் தூண்களுக்கு ஒத்துள்ளன. இருந்த போதும் சகல தூண்களும் சீராக அலங்கரிக்கப்படவில்லை. மடத்தின் உட்பகுதியில் உள்ள 9 தூண்களும் அலங்கார வேலைப்பாடுகளைக் கொண்டுள்ளன.
- செதுக்கல்கள் அரை புடைப்புத் தன்மையைக் கொண்டுள்ளன.
- எம்பக்க செதுக்கல்களைப் போலன்றி இவை சற்று விறைப்புத் தன்மையைக் கொண்டிருக்கின்றன. சில செதுக்கல்களின் பகுதிகள் தேய்ந்துள்ளன.
- இங்கு காணப்படும் இன்னொரு முக்கிய வேலைப்பாடு கூரைக்கு இடப்பட்ட குறுக்கு வளைகள் செதுகக்ப்பட்டிருப்பதாகும். அவை சுற்றுபப்பிரகாரம் (பெரஹர), கொடிவலை அலங்கார வேலைப்பாடுகளைக் கொண்டுள்ளன.
- பனாவிட்டிய மடத்தில் காணக்கூடிய செதுக்கல் நிர்மாணிப்புகள் 1. மல்யுத்தம் 2. நடனமாது, மேளம் அடிப்பவர் 3. நடனமாது 4. நடனக்காரர் (மலைநாட்டு) 5. பிணைந்துள்ள பாம்புகள் 6. மயிற் சோடி 7. மான் சோடி 8. சுற்றுப்பிரகாரம் (பெரஹர) *(5 புள்ளிகள்)*

**iii)**

- ஊடகமாக மரம், செங்கற்கள், சீமெந்து பயன்படுத்தப்பட்டுள்ளது.
- புத்தர் சிலைகளில் சிரஸ்பத, திறந்த கண்கள் ஆடை அமைப்பு அலை இரேகைகள் மூலம் காட்டப்பட்டுள்ளதுடன் மகர தோரணம் என்பன காட்டப்பட்டுள்ளத. திறந்த கண்களுக்கு மாணிக்கக் கற்கள் பதிக்கப்பட்டுள்ளது. நீண்ட காதுகள் காணப்படுகின்றது.
- இந்து மற்றும் மகாயான கொள்கைகள் காணப்பட்டமை.
- தென் இந்திய இந்து சிற்பாசிரியர்களின் உதவி கிடைத்தமை.
- தேவர்களின் எண்ணக்கருக்களை வெளிப்படுத்த முயன்றுள்ளமை. *(8 புள்ளிகள்)*

### *வினா இல 03*

i) தங்கமீனும் பெண் பிள்ளையும், கண்ணாடியின் முன்னால் பெண் *(2 புள்ளிகள்)*

ii) எண்ணெய் வர்ணத்தினால் கன்வசு மீது வரையப்பட்டுள்ளது.
இதில் முன்னணி, இடையணி, பின்னணி என்பன தெளிவாக இனங்காணக் கூடியதாக இருககினற்ன.
கட்புலனான நோக்கங்கள் வெளிப்படுத்தியுள்ள விதத்தின்படி, ஒருங்கிணைந்துள்ள அசையாப் பொருட்களின் கலைத்துவப் பண்புகள் புலப்படுகின்றன. அக்கடமிக் ஓவியக் கட்டமைப்புக்கு ஏற்ப அசையாத, திண்ம, உருவங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன.
அசையாப் பொருட்களை ஒருங்கிணைத்தல்
கன்வசு மீது எண்ணெய் வர்ணத்தினால் வரையப்பட்டுள்ளது.
கனவடிவவாத கலை இயல்புகள் உபயோகிக்கப்பட்டுள்ளன.
ஒட்டுமொத்த ஓவியமும் கனவடிவவாத கலைப் பண்புகளைக் கொண்டுள்ளது.
*(5 புள்ளிகள்)*

**iii)**

<u>கோதமி விகாரையின் மாரணை தோற்க்கடித்தல்</u>

- கண்டிய காலத்து வரலாற்று ரீதியான அம்சங்களைப் பின்னணியாகச் சித்திரித்துள்ளார்.
- கண்டிய யுகத்தில் வரயப்பட்டது போன்று திகிலூட்டும் சம்பவம் வரையப்பட்டுள்ளது.
  உதாரணம் :- (யுத்தத்திற்குத் தயாரான யானை, பாம்புகள், அரக்கர்கள்)
- பூமி பரிச முத்திரையுடன் மஹிகாந்தா (பூமாதேவி) காணப்படுதல் வரையறுக்கப்பட்டுள்ளமை.

- வர்ணங்களுக்கு ஏற்றவாறு இரேகைகளை பயன்படுத்தப்பட்டுள்ளமை.
- விகாரைச் சித்திரங்களுக்கு புதிய பாணி புகுத்தப்பட்டுள்ளமை.
- இயற்கைக்கு மாறான முகபாவ அங்க இலட்சனங்கள் வரையப்பட்டுள்ளமை.
- இரண்டு வகைப்பாவனையுடன், தடித்த இரேகைப் பயன்பாடு.
- இயற்கையான இலை கொடிகளை இடைவெளிகளை நிரப்பும் வண்ணம் பயன்படுத்தப்பட்டிருத்தல்.

<u>பெல்லன்வெல விகாரை – மாரனை தோற்கடித்தல்</u>

- புத்தரை போதிசத்துவராகக் காட்டப்பட்டமை.
- யுத்தம் தொடர்பான திகிலூட்டும் உருவங்கள் காட்டப்படவில்லை.
- உள்ளத்தால் போரிடுவதனையே காட்டப்பட்டுள்ளது.
- நேரடியாக யுத்தம் செய்வது காட்டப்படவில்லை.
- அரச இளம் குமாரனாக சித்தரிக்கப்பட்டுள்ளதுடன் ஆடை ஆபரணங்களுடனும் மெல்லிய இரேகைகளுடனும் வர்ணங்கள் பாவிக்கப்பட்டுள்ளது.
- மாய எண்ணங்களுடன் சித்தார்த்தர் போரிடுகின்ற தன்மை காட்டப்பட்டுள்ளது.
- கருப்பொருளை நேரடியாகவே விளங்கிக் கொள்ளும் வகையில் வரையப்பட்டுள்ளது.

**குறிப்பு :-** (இரேகை, வர்ணம், முகபாவம், உடை, ஆபரணங்கள், பின்னணி அங்க அசைவு) போன்ற விடயங்கள் பற்றி கலைத்துவ சிறப்புக்கள் எழுதப்பட்டிருப்பின் கவனிக்கத்தக்கது)
*(8 புள்ளிகள்)*

### வினா இல 04

i) தரைததோற்றகாட்சி விலங்குருவங்கள், வேட்டையாடும் காட்சி, யுத்தக் காட்சிகள், அரச குடும்பக் காட்சிகள் *(2 புள்ளிகள்)*

ii) யுத்தக் கட்சியை மையமாகக் கொண்டது. ஓவியத்தின் மத்தியில் கட்டுமரங்களால் அமைக்கப்ட்ட பாலத்தின் மீது ஓடிச் செல்லும் இரு யானை உருவங்கள் உள்ளன. இரு யானைகளும் வால்களை உயர்த்தித் தும்பிக்கைகளைச் சுருட்டி வேகமாக ஓடும் விதத்தில், கலைஞன் ஓவியத்தை மிகத் திறமையாகச் சித்தரித்துள்ளார்.
சாய்வாக அமைக்கப்பட்ட அவர்களது உடல்களால் ஓவியத்தின் அசையும் தன்மை தீவிரமாக்கப்பட்டுள்ளது.

இரு யானைகளுக்குப் பக்கத்தில் நீரில் மூழ்கும், ஓடம் செலுத்தும், யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் பல உடலநிலைகளையுடைய மனித உருவங்கள் சித்தரிக்கபட்டுள்ளன.

ஒட்டுமொத்தத்தில் பரபரப்பான பண்பை வெளிப்படுத்துவதாக உள்ளன. *(5 புள்ளிகள்)*

iii) மொகலாய கடட்ட நிரம்மாணிப்பு கலைகளுள் மிகவும் சிறப்பானது சாஜஹான் காலத்தில் அமைக்கப்பட்ட தாஜம்ஹால் மணட்பம் ஆகும். அக்ரா நகரத்ன் யமுனா நதிக்கரை அருகில் நிர்மாணிக்கப்படட்டுள்ள இது வெண்மையான சலவைக்கல்லினால் நிரம்மாணிக்கப்பட்டுள்ளது.

கூரையின் மத்தியில் அரைக் கோளவடிவமான சிகரம் உள்ளது. உட்பகுதியில் பலவித சலவைக் கற்களால் நிர்மாணிக்கப்பட்ட வேலைப்பாடுகள் அதிகமாகக் காணப்படுகின்றன. *(8 புள்ளிகள்)*

### வினா இல 05

i) ருகுமிக,ஜத்தந்த,மகாகபி,குறுங்கமிக *(2 புள்ளிகள்)*

**ii)**

- அமராவதி சைத்தியத்தியப் பகுதியில் கிடைக்கப்பெற்ற செதுக்கல்.
- தேவர்கள் சைத்தியத்திற்கு பூஜை செய்தல்.
- சைத்திய சுவர்களில் செதுக்கல்கள் அலங்காரமாக செதுக்கப்பட்டிருத்தல்.
- சைத்தியத்தைச் சுற்றி சிற்பங்கள் செதுக்கும் முகமாக கல் வேலிகள் காணப்படுதல்.
- நான்கு பக்கங்களிலும் தோரணத்திற்கு பதிலாக ஸ்த்தம்பங்கள் காணப்படுதல்.
- நீர்குமிழிழி வடிவ அண்டம் கர்மிக்கா ஜஸ்டியுடன் குடை காணப்படல். *(5 புள்ளிகள்)*

**iii)**

- சாஞ்சி தோரணத்தில் புத்தர் சரிதையின் வெவ்வேறு நிலைகளை சிற்பமாக செதுக்குவதற்கு சிற்பியால் முயற்சிக்கப்பட்டுள்ளது.

- புத்தருக்குப் பதிலாக சில குறியீடுகள் செதுக்கப்பட்டுள்ளது. (போதிமரம், (அரசமரம்), தர்மச்சக்கரம், சக்கரம் சைத்தியம் புத்தரின் பாதம்) என்பன.
- புத்தர் இல்லற வாழ்வை விட்டு வெளியேறுவதைக் காட்டுவதற்கு சக்கரமும் பாதச் சுவடுகளையும் காட்டியுள்ளனர். *(8 புள்ளிகள்)*

### *வினா இல 06*

i) மைரன்,பிடியாஸ்,பொலிக்டஸ் ,லிசிபஸ் *(2 புள்ளிகள்)*

**ii)**

- ஆரம்பகாலத்தில் உருவாக்கப்பட்ட கிரேக்க சிற்பங்களிடையே அப்பலோ, கோரே,கொறி , டெட்டலிக், டெட்டலிஸ், மெற்றோ பொலிட்டன் நூதனசாலையில் உள்ள இளைஞனின் வடிவம் என்பன முக்கியமானதாகும்.
- இவற்றில் கேத்திர கணிதக் கோட்பாடுகள் பின்பற்றப்பட்டுள்ளன.
- சாலனம், அசைவு, லயம், என்பன பின்பற்றப்படவில்லை.
- நேரான விறைப்புத் தன்மை பொருந்திய மெய்நிலைகள் கொண்டவை.
- நேராக நோக்கிய தலையும், விழித்த பார்வையும் கொண்டவை.
- தொங்கவிடப்பட்டவாறும், உடலுடனும் ஒட்டியவாறு கைகள் காணப்படும்.
- அகன்ற தோள்பட்டை காணப்படும்.
- ஒருகால் முன்னகர்த்தியவாறு இருக்கும் இதற்கு நூதனசாலையில் காணப்படும். இளைஞனின் வடிவம் சிறந்த உதாரணமாகும்.
  மேற்படி இலட்சனங்கள் பண்புகள் என்பன ஆரம்பகால கிரேக்க சிலைகளில் காணக்கூடிய பண்புகளாகும். *(5 புள்ளிகள்)*

**iii)**

- மேன்மைக்கால சிலைகளிலும் பார்க்க ஹெலனிஸ்டிக்யுக சிலைகளில் உணர்வு வெளிப்பாடுகள் அதிகமாகக் காணப்படும்.
- உதாரணமாக ''லவகூனும்'' அவனது புதல்வர்களும்
- இக்கால ஆக்கங்களிடையே, நிறைவான சிற்பக் கோட்பாட்டியல்புகளை காணமுடியும்.
- மேன்மைக்கால சிலைகளிலும் பார்க்க இவற்றில் மிகுந்த யதார்த்த பூர்வமான தன்மையும், சிறப்பான உணர்வுபூர்வமான தன்மையையும் கொண்டிருக்கும்.
- மனித குணாம்சங்களை உரியவாறு வெளிப்படுத்துமாறு காணப்படும்.
  உதாரணம் - பெண்வியாபாரி,இறக்கும் காலத்தியன்
- கன்னிகையின் உடற்கட்டமைப்பை வெளிப்படுத்தல் உதாரணம் - வீனஸ்
- மிகச் சிறப்பான உயரிய பூரணப்பாடு
- உடைகளையும் சால்வைகளையும் வெளிப்படுத்துகையில் - சிற்பசாஸ்திர நிபுணத்துவ் சிறப்பாக கையாளப்பட்டுள்ளது.
- சுருக்கங்களோடு வளிந்து காணப்படும் சால்வைகள்.
- சுருக்கங்களில் காணப்படும் ஆழம்.
- இவைகள் ஹெலனிஸ்டிக்கால சிற்பிகளில் முன்னிலைப்படுத்திக் காட்டக்கூடிய உயரிய திறன்களாகும். *(8 புள்ளிகள்)*

### *வினா இல 07*

**i)** நடன வகுப்பு, குளியல் தொட்டி ,தலைவாரும் பெண் *(2 புள்ளிகள்)*

**ii)** மேரி கசற்றின் ''நீல அறை'' ஓவியத்தை சுருக்கமாக மதிப்பிடவேண்டும் *(5 புள்ளிகள்)*

**iii)**

- ஒளியினால் ஏற்படும் மாற்றத்தை கண்டுபிடிப்பதற்காக முயற்சித்த கொலற்மொனே இயற்கையான தன்மையை கலைஞரிடம் காண முடியாது உள்ளத்தில் ஏற்படும் மாற்றத்தைக் கூறியுள்ளார் இதற்கு சிறந்த உதாரணமாக ''சூரிய உதயம்'' என்ற ஓவியத்தை கூறலாம்.
- நீர் பரப்பிலுள் விழுகின்ற சூரிய வெளிச்சத்தை சில பொழுதில் மாற்றமடைவதை சிறப்பாகக் காட்டியுள்ளார்.
- றோமன் தேவாலயத்தில் இருக்கின்ற பல கலைப்படைப்புக்கள்
- ஒரே நாளில் கலைப்படைப்புக்களை உருவாக்கி ஒளியின் கலைப்படைபுக்களை உருவாக்கி ஒளியின் மாற்றத்தை கண்டு பிடித்துள்ளார். ''வோட்டலுப் பாலம்'' (ஓட்டலுபாலம்) என்ற ஓவியம் மிகவும் சிறந்த மற்றொரு படைப்பாகும். இவை இயற்கைத் தன்மையின் உயிரோட்டத்தையும் விசித்திரத்தன்மையையும் வளிப்படுத்துவதற்கு இவர் செய்த முயற்சிகள் எனக் கூறலாம். *(8 புள்ளிகள்)*